DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.303/2023**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | சாது ரமேஷ் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | மாணிக்கம் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 03.06.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரை மாநகர கூடல்புதூர் குற்ற பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.05.2026 ம் தேதி பணி மூப்பின் காரணமாக தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். திருவேகம்பத்துார் காவல் நிலைய குற்ற எண்.17/2018, பிரிவு 279, 337 IPC வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் சீமைச்சாமி என்பவரின் கையெழுத்தை எனக்கு நன்கு தெரியும். அதன் அடிப்படையில் கோப்புகளைப் பார்த்து சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி சார்பு ஆய்வாளர் 31.03.2018 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது சிவகங்கை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று சிவகங்கை அரசு

மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சென்று விசாரித்ததில் காயம்பட்ட சேகர் என்பவர் முதல் சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டதாக தகவலைப்பெற்று அங்கிருந்து அரசு மருத்துவமனை சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த திராணியைச் சேர்ந்த கருப்பையா மகன் சேகர் என்பவருக்கு உதவியாக இருந்த அவரது மனைவி சிவகாமி என்பவர் கொடுத்த புகாரைப் பெற்று திருவேகம்பத்தூர் காவல் நிலையம் வந்து 01.04.2018 ம் தேதி காலை 10 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) மேலும் சார்பு ஆய்வாளர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் 4,5 முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். (**மேற்படி பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சாஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) அன்றை தினமே சாட்சிகள் 1 முதல் 3 வரை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் மதுரை ராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் இறந்துபோய்விட்டதால் விசாரணை முடித்து மேல்விசாரணைக்காக ஆய்வாளருக்கு வழக்கு கோப்பை பார்வைக்கு வைத்துள்ளார். மேலும் இவ்வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சட்டப்பிரிவை பிரிவு 279, 337 IPC லிருந்து பிரிவு 279, 337, 304(A) IPC ஆக மாற்றம் செய்தேன். (**மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்பு சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகளை விசாரணை செய்ததில் சார்பு ஆய்வாளரிடம் கூறிய சங்கதிகளை என்னிடமும் கூறியதால்

தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1, 2 ஐ விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் மருத்துவமனை சென்று சவக்கிடங்கில் இருந்த இறந்துபோன சேகரின் உடலை சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை நடத்தினேன். (**மேற்படி பிரேத விசாரணை அறிக்கை அ.சாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் பிரேதத்தை சடல கூறாய்வு செய்ய வேண்டுகோள் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்து பிரேதத்தை சடல கூறாய்வு செய்து உறவினர்களிடம் ஒப்படைத்தேன். (**மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அ.சாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் விபத்து ஏற்படுத்திய இரு சக்கர வாகனமாக TN 63 AR 7407 Heor splender வாகனத்தையும், விபத்துக்குள்ளான வாகனமான TN 63 AT 3289 Splender pro இரு சக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு ஆய்வுக்கு அனுப்பி மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பெற்றேன். (**மேற்படி TN 63 AR 7407 Heor splender ன் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் எனக்கு பிறகு பொறுப்பேற்ற ஆய்வாளரிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் புகார்தாரரின் கணவர் ஓட்டிவந்த TN 63 AR 7407 Heor splender வண்டியை TN 63 AT 3289 என்ற spelender pro வாகனம் மோதி விபத்து ஏற்படுத்தியதாகதான் உள்ளது என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 1, 2 மறு விசாரணை செய்தபோது எதிரி ஓட்டி

வந்த வாகனத்தின் பதிவு எண் திருத்தி TN 63 AT 3989 spelender pro என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். TN 63 AT 3989 தான் எதிரியின் வாகனம் என்றும் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனம் வேறு வாகனம் என்றும் விபத்து இழப்பீடு பெறுவதற்காக பொய்யான முறையில் எதிரியின் வண்டி எண் TN 63 AT 3989 என திருத்தம் செய்து பொய்யான முறையில் எதிரியின் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தால் விபத்தை ஏற்படுத்திய வாகனம் என்ன என்று தெரிய வந்திருந்திருக்கும் என்றும் உண்மையில் எவ்வித விசாரணையும் சம்பவ இடம் சென்று விசாரணை செய்யாததால்தான் இந்த எதிரியின் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.